நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்
807, அண்ணா சாலை, சென்னை-2.

**<u>சுற்றறிக்கை</u>**

<u>ந.க.எண்.12641 /2014/சிபி</u> <u>நாள்.25.7.2014</u>

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப இசைவு/திட்ட அனுமதி அளிக்கப்படும் பலமாடி கட்டிடம்/சிறப்பு கட்டிடம்/தொகுப்பு கட்டிட உத்தேசங்களைப் பொறுத்தவரை ஏற்கனவே பெறப்பட்டு வந்த சான்றுகளுடன் கூடுதலாக இணைப்பில் கண்டுள்ள சான்றுகளை பெற்று பரிசீலிக்க தெரிவித்தல் -தொடர்பாக.

-------

நகர் ஊரமைப்புத் துறையின் தொழில் நுட்ப இசைவு /திட்ட அனுமதி வழங்கக் கோரி பெறப்படும் தொகுப்புக் கட்டிடம்/சிறப்புக் கட்டிட உத்தேசங்களைப் பொறுத்தவரை கட்டிட ஸ்திரத்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு உரிமம் பெற்ற Chartered Structural Engineer-யிடமிருந்து Stability சான்று A,B,C படிவத்தில் பெற்று பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இனிவரும் காலங்களில் தலைமையலுவலகத்தால் தொழில்நுட்ப இசைவு மற்றும் சார்நிலை அலுவலகங்கள் அளவில் திட்ட அனுமதி/தொழில்நுட்ப இசைவு அனுமதி வழங்கப்படும் அனைத்து பலமாடி கட்டிடம்/சிறப்பு கட்டிடம்/தொகுப்பு கட்டிட உத்தேசங்களைப் பொறுத்தவரை, ஏற்கனவே உரிமம் பெற்ற Chartered Structural Engineer-யிடமிருந்து பெறப்பட்டு வந்த Stability சான்று A,B,C படிவம் மட்டுமல்லாது, இணைப்பில் கண்டுள்ள சான்று படிவங்களையும் பூர்த்தி செய்து, அதில் குறிப்பிட்டுள்ளபடி உரிய சான்றொப்பம் பெற்றும் மற்றும் கட்டிட அமைப்பு வரைபடங்களில் உரிய கையொப்பம் பெற்றும் தொழில்நுட்ப இசைவு/திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இச்சுற்றறிக்கை உடன் அமுலுக்கு வருகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>இணைப்பு:</u>** படிவங்கள்-3

(ஒம்)/-இரா.வெங்கடேசன்
நகர் ஊரமைப்பு ஆணையர்

பெறுநர்
அனைத்து உறுப்பினர் செயலர்கள்,
உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும்
அனைத்து மண்டல துணை இயக்குநர்கள்.
நகல்:
1) அனைத்து தலைமை அலுலக உதவி இயக்குநர்கள்
2) கட்டிடக்கலை/ திட்ட உதவியாளர்/
மேற்பார்வையாளர்கள்/வரைவாளர் நிலை-2
3) இருப்பு கோப்பு 4) e-Governance

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்